பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 வைகாசி 6 ஜு ஆண்டு 12 இதழ் 98
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 20-5-78

# தமிழ் ஈழ விடுதலைப்புலி இயக்கம் பொலிசாரின் சோடனை

## பேரவையில் அமிர் குற்றச்சாட்டு

[கொழும்பு]
"தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம்" என்பது பொலிசாரினால் சோடிக்கப்பட்ட ஒரு போலி இயக்கமாகும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் நேற்று தேசிய அரசுப் பேரவையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தடைச்சட்ட மூலத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அரசு ஆதரவுப் பத்திரிகைகளும் பொலிசாருமே இந்த தமிழ் ஈழ விடுதலைப் புலி இயக்கத்தை உருவாக்கிவிட்டிருக்கிறார்கள். வன்முறையை நாம் பல

[6-ம் பக்கம் பார்க்க]

RECEIVED PERIODICALS DIVISION

# பேரவையில் அமிர் - சிவா ஒழுங்குப் பிரச்னை கிளப்பினர்

## மத்யூ - அமிர் வாக்குவாதம் அரசதரப்பில் கூச்சல்!

(கொழும்பு)

**தேசிய அரசுப் பேரவையில் தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் தடை சட்டமூலம் மீதான விவாதத்தில் கைத்தொழில் அமைச்சர் திரு, சிறில் மத்யூ உரையாற்றுகையில் தமிழர் கூட்டணிபற்றி கூறிய தகவல் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கும் திரு சிறில் மத்யூவுக்குமிடையே பலத்த வாக்குவாதம் இடம் பெற்றது.**

**அமைச்சரின் கூற்று ஒன்றை அவர் வாபஸ் பெற வேண்டும் என்று திரு. அமிர்தலிங்கமும் நல்லூர் எம். பி. திரு. சிவசிதம்பரமும் கிளப்பிய ஒழுங்குப்பிரச்னையை அடுத்து அமைச்சர் தமது கூற்றை வாபஸ் பெற்றார்.**

தமிழ் ஈழவிடுதப் புலிகள் தடைச் சட்டமூலம் மீது திரு. சிறில்மத்யூ பேசுகையில் கூறியதாவது: தமிழ் மக்களுக்குச் சுதந்திரம் வழங்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் சிங்கள மக்களுக்குத்தான் யாழ்ப்பாணத்தில் வாழ முடியாத நிலை உள்ளது. அங்குள்ள தமிழர்கள் சிங்கள அரசாங்க ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் வீடுகளை வாடகைக்கு கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால் இங்களப்பகுதிகளில் அநேக தமிழர்கள் இன்று வாழ்கிறார்கள்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் இசகைவர்களுக்கு எதிராக வேலை நிறுத்தம் நடைபெற்றது. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் சிறுபான்மைத் தமிழருக்கு வேலை கொடுத்ததை எதிர்த்து அங்கே வேலைநிறுத்தம் நடைபெற்றது. இதேசமயம் குறுக்கிட்ட திரு. அமிர்தலிங்கமும் திரு சிவசிதம்பரமும் இக் கூற்றுக்கள் பொய்யானவை என்று கூறினர்.

அங்கு சிறுபான்மைத் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் பணிபுரிகின்றனர் என்று திரு. அமிர்தலிங்கமும் திரு. வி. யோகேஸ்வரனும் கூறினர்.

திரு. சிறில் மத்யூ மேலும் பேசுகையில், தமிழ் ஈழம் அமைத்தால் இவ்வாறுதானா ஆட்சிசெய்யப் போகிறீர்கள் என்றும், யாழ். முன்னாள் மேயர் துரையப்பா, உரும்பராய் பெட்ரோல் நிலைய முதலாளி நடராஜா, சி. ஐ. டி. பொலிசார், கருணாநிதி ஆகியோர்கள் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள் என்று கூறினார்.

அப்போது குறுக்கிட்ட மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், நீங்கள் கொலையாளர்களை தேடிக் கண்டுபிடியுங்கள் என்றார்.

### அமைச்சர் தமது கூற்றை வாபஸ் பெறவேண்டும்

அப்போது திரு. மத்யூ நீங்கள்தானே இந்நிலையை உருவாக்கினீர்கள் என்று கூறிய போது குறுக்கிட்ட திரு. அமிர்தலிங்கமும் திரு. சிவசிதம்பரமும் அமைச்சர் இக்கூற்றை வாபஸ்பெறவேண்டும் என்று கூறினர்.

### சபையில் கூச்சல்

அப்போது சபையில் கூச்சல் எழுந்தது.

அமிர்; [சபாநாயகரைப் பார்த்து] நீங்களே எங்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். சரியான முறையில் உரிமைகள் பாதுகாக்கப்படாவிடின் நாம் இங்கிருந்து வெளிநடப்புச்செய்யவேண்டி ஏற்படும்.

### அமைச்சரின் கூற்று வாபஸ்

இக்கூற்றை அமைச்சர் பொறுப்பேற்கவேண்டும் அல்லது கூற்றை வாபஸ்பெற வேண்டும் என்று சபாநாயகர் கேட்டுக்கொண்டதை அடுத்து திரு. சிறில் மத்யூ கூற்றை வாபஸ்பெற்றார்.

ஒருகட்டத்தில் சிங்களமக்களின் இரத்தத்தில் நீந்த வேண்டும் என்று திரு. அமிர்தலிங்கமும் அவரது பனைவியும் வவுனியாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியதாக திரு சிறில் மத்யூ கூறியதை எதிர்க்கட்சித் தலைவர் மிக வன்மையாகக் கண்டித்து அமைச்சர் அதை வாபஸ்பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தேர்தல் காலத்தில் நடைபெற்ற விஷயமாகையால் அதை விட்டுவிடுவோம் என்று சபாநாயகர் கூற திரு. அமிர் என்னையும் எனது மனைவியையும் பற்றி அடிக்கடி இங்கு

[6-ம் பக்கம் பார்க்க]

## அச்சுவேலி கொள்ளை வழக்கு

### கணக்குப் புத்தகங்களை பார்வையிட அனுமதி

### ஜூன் 29-ந்திகதி விசாரணை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச்சங்க கொள்ளை வழக்கில் 3 சான்றுப் பொருட்களான, சம்பவம் நடந்த தினத்தின், கணக்குப் புத்தகம், தினசரி பணவசூல் புத்தகம், பணப்பற்றுச்சீட்டுப் புத்தகம் ஆகியவற்றை பரிசோதகர் பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது.

அச்சுவேலி ப. நோ. கூ. சங்க கொள்ளை வழக்கு யாழ் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர்முன்னிலையில் கூப்பிடப் பட்டது.

எதிரிகள் மூவரும் கோர்ட்டில் ஆஜரானார்கள். 1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினமும்,

[6-ம் பக்கம் பார்க்க]

## ஈழ விடுதலைப்புலி இயக்க தடைச்சட்டம் நிறைவேறியது

### ஆதரவு — 131 எதிர் 25

[கொழும்பு]
தமிழ்ஈழ விடுதலைப் புலி இயக்கத்தையும் அது போன்ற இயக்கங்களையும் தடை செய்யும் சட்டம் நேற்று மூன்றில் இரண்டு அதிகப்படியான வாக்குகளைப்பெற்று நிறைவேறியது.

இச்சட்டத்திற்கு ஆதரவாக 131 பேரும் எதிராக 25 பேரும் வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் சுதந்திரக்கட்சியும் இந்தச் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்தனர். இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமானும் சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களித்தார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு 1 மணி வரை நடைபெற்ற இச் சட்டமூலம் மீதான விவாதம் நேற்றுப்பகல் ஒரு மணிக்கு முடிவுற்று 1-14 மணிக்கு வாக்கெடுப்பு நடைபெற்றது.

ஒரு வருடம் மட்டுமே இச் சட்டம் அமுலில் இருக்கும் என்ற திருத்தத்துடனேயே இச்சட்டம் நிறைவேறியது. (ம-இ)

# திருக்குறள் மாநாடு இன்று புங்குடுதீவில் ஆரம்பம்

[வண்ணார்பண்ணை]
தமிழ்மறைக் கழகத்தின் பதினெட்டாவது திருக்குறள் மாநாடு இன்று புங்குடுதீவில் ஆரம்பமாகிறது. தொடர்ந்து இம்மாநாடு மூன்று தினங்கள் நடைபெறும்.

புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் ஆதரவுடன் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் அரங்கில் நடைபெறும் இம் மகாநாட்டை எதிர்க் கட்சித் தலைவரும் காங்கேசன்துறை எம். பியுமான திரு, அ. அமிர்தலிங்கம் நாளை தொடக்கி வைக்கவிருக்கிறார்.

மகாநாட்டு ஆரம்பத்தின் போது புங்குடுதீவு இளைஞர் கழக மண்டபத்திலிருந்து திருக்குறள் ஏட்டுச் சுவடி ஊர்வலமாக மகாநாட்டு மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

சனி,ஞாயிறு திங்கள் ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கு முறையே தமிழ் மறைக்கழகத் தலைவர் பண்டிதர் கா.பொ. இரத்தினம் எம். பி, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல், யாழ். வளாக விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு ஆகியோர் தலைமைவகிப்பர்.

சென்னை தென்மொழி ஆசிரியர் புலவர் பெருஞ்சித்திரனார், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், சமூவேந்தன், யாழ். வளாகத்தலைவர் சு. வித்தியானந்தன், செந்தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம், கவிஞர் காசி ஆனந்தன், கலாநிதி அ. சண்முகதாஸ் ஆகியோர் உட்பட 33 பேர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர்.

### சிறப்பு மலர்

மகாநாட்டுச் சிறப்புமலரை எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வெளியிட்டுவைப்பார். இசையரங்கு வில்லுப்பாட்டு, நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளும் இம்மாநாட்டில் இடம்பெறுகின்றன.

தமிழ் மறைக்கழகச் செயலாளர் திரு. தி. சிவசாமி (தில்லைச்சிவன்) ஆசிரியர், புங்குடுதீவு இளைஞர் கழகச் செயலாளர் திரு க. திருநாவுக்கரசு ஆகியோர் இவ்விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். (அ)

ஈழநாடு The Eelanaadu

## புடவையில் தன்னிறைவு!

மின்னேரியாவில் நேற்று முன்தினம் நிகழ்ந்த துணி ஆலைத் திறப்புவிழாவில் பேசிய புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ் இன்னும் இரண்டு வருடங்களில் நாடு துணி உற்பத்தியில் தன்னிறைவு பெறும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

துணி உற்பத்தியில் தன்னிறைவு காணும் நோக்கத்துடனும் வேலைவாய்ப்பளிப்பதற்காகவும் டாக்டர் தகநாயகா நாடுமுழுவதிலும் நெசவாலைகளை நிறுவினார். உள்ளூர்த்துணிகளையே மக்கள் அணியவேண்டும்என்று அவர் பிரசாரமும் செய்தார்.

பல இளைஞர்களும் யுவதிகளும் நெசவுத் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். ஆனால் நெசவு நூல் தட்டுப்பாடு நெசவுத் தொழிலில் அவர்களைத் தொடர்ந்து ஈடுபடுவதற்கு இடையூறாக இருந்தது.

நெசவுநூல் இறக்குமதியிலும் விநியோகத்திலும் கடந்த சில வருடங்களாக இருந்த தட்டுப்பாடும் சீரற்ற நிலையும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுவந்தவர்களைப் பெரிதும் பாதிக்கச் செய்தது பலர் இத்தொழிலையே கைவிட வேண்டிவேற்பட்டது.

இந்த அரசாங்கம் பதவிக்குவந்தபின் நெசவுநூல் இறக்குமதியிலும் விநியோகத்திலும் இருந்துவந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது. புதிய நெசவாலைகளை அமைக்கவும் ஊக்கமளித்தது.

ஆனாலும் துணிகளை உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நெசவு நூல்களுக்கு இன்னமும் வெளிநாட்டுக் கப்பல்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டியுள்ளது.

அம்பாந்தோட்டைப் பகுதியில் பருத்திபதனிடும் தொழிற்சாலைகள் இரண்டு அமைக்கப்படவிருப்பதாகவும் விரைவில் இருபதினாயிரம் ஏக்கர் நிலத்தில் பருத்தி உற்பத்தி செய்யப்படவிருப்பதாகவும் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்திருக்கிறார்.

ஐந்து ஏக்கருக்குமேல் பருத்திச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்குக் கடனுதவியும் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியை கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடுகள் பலவும் நெசவுக்கலையில் பெரும் முன்னேற்றமடைந்துவிட்டன. ஒரு காலத்தில் இலங்கையின் சில பகுதிகளில் நெசவுக்கலை மிகச் சிறப்படைந்திருந்தது.

துணி உற்பத்திக்கு நமது அரசாங்கம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது இதன்மூலம் உள்நாட்டுத்தேவையை நிறைவேற்றவும் வேலையில்லாப் பிரச்னை குறையவும் வழி பிறக்கலாம்.

ஆனால் வெளிநாடுகள் பலவும் உற்பத்திசெய்யும் துணிகளின் தரத்துக்கு ஈடாகவும் நமது நாட்டில் துணிகள் உற்பத்திசெய்யப்படவேண்டும். இல்லையேல் இன்றுள்ள காஞ்சிபுரம், மணிப்புரி, சிங்கப்பூர் நைலக்ஸ் மோகமும் அதனுல் நடைபெறும் கடத்தலும் தொடரத்தான்செய்யும்! ந

# “தமிழீழமே இலட்சியம்: எனினும் வன்முறையை எதிர்க்கிறோம்”

## “விடுதலைப் புலிகள்” தடை மசோதா மீது ‘அமிர்’ ஆணித்தரமான உரை



(கொழும்பு)

‘தமிழீழம் ஒன்றே தமிழர் விடுதலைக்கூட்டணியின் இலட்சியமாகும். எனினும் நாம் வன்செயலில் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லர். காந்திய வழியில் நம்பிக்கைகொண்டுள்ளவர்கள் நாம் சமீபத்திய படுகொலைச் சம்பவங்களை நாம் கண்டிக்கிறோம்.”

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. ஏ. அமிர்தலிங்கம் “தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கும்’ இதையொத்த வேறு அமைப்புகளுக்கும்தடை விதிக்கும் சட்ட மூலப் பிரேரணை மீது நேற்று முன்தினமிரவு தேசிய அரசு பேரவையில் பேசுகையில் கூறினார்.

### பின்னணியில் வேறொரு நோக்கம்?

திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

“புலிகள் இயக்கம் குறித்து செய்யப்படும் பிரசாரத்தின் பின்னணியில் வேறொரு திட்டமும் நோக்கமும் உள்ளதோ என எண்ணத்தோன்றுகிறது.

தமிழீழம் ஒன்றே தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியமாகும். ஆனால் நாம் வன்செயல்களில் நம்பிக்கைகொண்டவர்கள் அல்லர். நமக்கு காந்திய வழியிலேயே நம்பிக்கை உண்டு. சமீபத்தில் நடைபெற்ற படுகொலைகளை நாம் கண்டிக்கிறோம்.

### வாக்குறுதியை அரசு நிறைவேற்றவேண்டும்

தமிழ்மக்களின் உரிமைகளை வழங்குவோம் என்று தான் அளித்திருந்த வாக்குறுதியை அரசாங்கம் விரைவில் நிறைவேற்றவேண்டும்” என்றார்.

### நவம் பேச்சு

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் பேசுகையில், இலகுவாக பிடிக்கக்கூடிய நபர்களைப் பொறுத்தவரையில் பெருந்தொகை சன்மானத்தை அரசு சன்மானமாக அளிக்க முடிவுசெய்தது தேவையற்ற” என்றார்.

### அனுரா உரை

மஸ்கெலிய - நுவரெலிய தொகுதி இரண்டாவது எம். பி.யான திரு அனுரா பண்டாரநாயகா பேசுகையில், ‘புலிகள் இயக்கம் போன்ற இயக்கங்களைத் தடைசெய்ய சட்டம் வருவதனை வரவேற்கிறோம் ஆனால் ஏனைய இயக்கங்களையும் இச்சட்ட மூலம் தடுக்க வழி வகுத்து விடும் என்பதால் இதனை எதிர்க்கிறோம்’ என்றார்

“பிளவுபடாத நாடே எமது கொள்கை” என்றும் திரு. பண்டாரநாயகா சொன்னார்.

(உ)

“மலையக கலவரம்:

# கூட்டணி - தொண்டமான் இணைப்பால்என்பதற்கில்லை’

## சன்சோனிக் கமிஷன் விசாரணையில் வண. பிதா

(கண்டி)

“இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் எம். பி தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைந்திருப்பதன் விளைவாக மலைநாட்டிலுள்ள சிங்களவர்கள் மத்தியில் தவறான எண்ணம் ஏற்பட்டு அதனால் இந்த வன்செயல் இடம்பெற்றது என எண்ணுவதற்கும் இடமில்லை”

இவ்வாறு கண்டியில் சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் வணபிதா மனுவேல் ஜோர்ஜ் நல்லதம்பி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் சொன்னார்.

அரச சட்டத்தரணி திரு. தென்னக்கோன் குறுக்கு விசாரணை செய்தபோது அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

“நான் பலாத்காரத்தை அடியோடு வெறுக்கிறேன்” என்று அவர் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

‘மலையகமக்கள் பிரிவினையை எதிர்ப்பவர்கள். யாழ். நகரில் நடந்த வன்செயல்களுக்கும் மலையகத்தில் ஆகஸ்டில் நடந்த வன்செயல்களுக்கும் தொடர்பிருப்பதாக நான் நினைக்கவில்லை’ என்றும் சாட்சி குறுக்கு விசாரணையின்போது சொன்னார். (உ)

# 109 மேலதிக வாக்குகளால் மசோதா நிறைவேறியது

## தொண்டமான் வாக்களிக்கவில்லை

(கொழும்பு)

குற்றவியல் நடவடிக்கை முறை சிறப்பேற்பாடுகள் சட்டமூலம் நேற்றுமுன்தினம் தேசிய அரசபேரவையில் 109 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

இச்சட்டமூலத்தைஎதிர்த்து 23 பேர் வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக்கூட்டணியும் தத்திரக்கட்சியும் சட்டமூலத்தை எதிர்த்து வாக்களித்தன.

இ தொ. கா. அரசியல் பிரிவைச்சேர்ந்த திரு. எஸ். தொண்டமான் எம். பி.வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. (உ)

## அஷ்டோத்திர மகா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நயினாத்தில்லைவெளி ஸ்ரீ பிடாரி அம்பாள், வைகாசி விசாகதின அஷ்டோத்திர (108 கலசம்) மகா சங்காபிஷேகம், நயினைக்குருமணி வெஸ்ரீ சாமிநாதக் குருக்கள் பரமேஸ்வரக்குருக்கள் தலைமையில் 21-ம் திகதி விசாகதினத்தன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

## மனவாக்கு

துன்பத்தை மனதிலேயே வைத்திருப்பவன் எங்கே போனாலும் துன்பம்தான், இறக்கிவைக்கத் தெரிந்தவன் எங்கே இருந்தாலும் இறக்கிவைத்துவிட முடியும்.

-கவியரசு கண்ணதாசன்

குண்டன் கேட்ட கேள்வி:

# “நீ தமிழனு? யாழ்ப்பாணமா, இந்தியாவா என்பதல்ல பிரச்னை’

## சன்சோனிக்கமிஷன் முன் கலஹா வாசிசாட்சியம்

(கண்டி)

“என்வீட்டுக்கு வந்த குண்டர்கள் ‘நீ ஒரு யாழ்ப்பாணத் தமிழனு?’ என்று கேட்டார்கள். நான் ஒரு இந்தியத் தமிழன் என்று பதிலளித்தேன். வந்தவர்களில்ஒருவன் நீயாழ்ப்பாணத்தானு? இந்தியக்காரனு என்பதில் எமக்குப் பிரச்னை இல்லை. நீ தமிழன் தானே என்று சொன்னான்.’

இவ்வாறு கண்டியில் சன்சோனிக் கமிஷன் விசாரணையின்போது இலங்கை புகையிலைக் கம்பனியில் கடமையாற்றும் கலஹா குரூப்பைச்சேர்ந்த ஜெயநேசன் ஹென்றி தம்பிராஜா என்பவர் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது; “மேற்படி குண்டர்களில் ஒருவன் என்னையும் மனைவியையும், மகனையும் வீட்டைவிட்டு வெளியேறுமாறு சொன்னான். நாம் வெளியேறினோம். வழியில் குண்டன் ஒருவன் என் தலையில் வெட்டினான். யாழ்ப்பாணத்தில் எங்கள் ஆட்களை இப்படித்தான் வெட்டுகிறார்கள். தமிழர்களை இங்கு கொல்லவேண்டும் என்று அவன் கத்தினான்.

எமது வீடும் கொள்ளையடிக்கப்பட்டது.” (உ)

## நாளை தேர்

(மட்டுவில்)

கிளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் ரதோற்சவம் நாளை நடைபெறுகிறது தீர்த்தோற்சவம் நாளை மறுதினம் நடைபெறும். (அ)

## மகோற்சவம்

(மட்டுவில்)

மீசாலை சப்பச்சிமாவடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இம் மாதம் 29ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இது தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (உ)

## இன்றைய இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நுண்கலை மன்றத்தின் மாதாந்த இசையரங்கு வரிசையில் இன்று மாலை செல்வி ராஜலட்சுமி கணேசபாபதியின் இன்னிசைக்கச்சேரி யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெறுகிறது.

செல்வி தனதேவி கப்பையா வயலினும் திரு ஏ. சந்தான கிருஷ்ணன் மிருதங்கமும் திரு. கே. கணேசன் கஞ்சிராவும் வாசிப்பர்.

(5-ம் பக்கம் பார்க்க)

அரசு விரோத நடவடிக்கை:

# ரஷ்ய தீர்ப்பு: யு.எஸ். கண்டனம்

வாஷிங்டன், மே 19 அரசுக்கு விரோதமான சஞ்சிகைகளை வெளியிட்டதான குற்றச்சாட்டின்பேரில் சோவியத் யூனியன் மூரிஹோவ் என்பவருக்கு சிறைத்தண்டனை விதித்துள்ளதை அமெரிக்கா கண்டித்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டின் பேரில் சோவியத் அரசாங்கம் பிரஸ்தாப நபருக்கு 7 வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்திருந்தது.

சர்வதேச மனித உரிமை பிரகடனத்தை மீறுவதாக சோவியத்தின் இத்தண்டனை விதிப்பு அமைந்துள்ளது என்று அமெரிக்கா தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது. (உ)

# ஒப்புயர்வற்ற ஒரு நூல் திருக்குறள்

— பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி, —

திருக்குறள் பலதுறைகளில் ஒப்புயர்வற்ற பெருநூலாகவும் தனிச்சிறப்புக்கள் பலவுடையதாகவும் தமிழ் மறையாகவும் விளங்குகின்றது. இது ஒரு சமய நூலன்று, எனினும் உலகப் பொதுமறை எனவும் போற்றப்படுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டதெனினும் உலகப்பொதுமறை எனவும் போற்றப்படுகின்றது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்டதெனினும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதை நிலைநாட்டி சமவாய்ப்புச் சம உழைப்புச் சமநீதிச் சமவாழ்வுச் சமுதாயத்தை உருவாக்கும் வழியை வகுத்துக் காட்டுகின்றது. மனிதகுலத்தின் சாதி மதகுல நிறவர்க்க பொருளாதார வேறுபாடுகளை அகற்றும் நெறியை விளக்குகின்றது; உறுதியான உழைப்பினால் எவரும் எண்ணியதை எண்ணியவாறு பெறலாம் என்பதை வலியுறுத்துகின்றது; மக்களைச் சரண்டிவாழும் புல்லுருவிகளுக்கும் பச்சோந்திகளுக்கும் மானம் இழந்து மாற்றாரை மண்டியிட்டு அண்டிப்பிழைப்போருக்கும் உய்யும் வழியை உரைக்கின்றது.

இத்தகைய சிறப்புக்களால் திருக்குறள் தமிழ் அறிஞர்களையும் பிறநாட்டறிஞர்களையும் ஈர்த்து இன்புறுத்தியுள்ளது. திருக்குறளிலும் அதன் ஆசிரியர் திருவள்ளுவரிடத்தும் பேரார்வங்கொண்ட மக்கள் தங்கள் ஈடுபாட்டைப் புலப்படுத்தித் திருக்குறளுக்குப் பத்துக்கு மேற்பட்ட பெயர்களை இட்டனர். திருவள்ளுவருக்கும் தெய்வப்புலவர் முதலிய பலபெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர். திருவள்ளுவருக்குக் கோவில் கட்டினர்.

திருக்குறளின் கருத்தாழத்திலும் சொற்றிறனிலும் தோய்ந்த அறிஞர்கள் பெருமக்கள் தம்மித்தனைகளுக்கேற்ப பல உரைகளை எழுதிப் பணிபுரிந்தனர். பதின்மர் எழுதிய உரைகளின் பின் இன்றுவரையும் பல புத்துரைகளை எழுதி வெளியிட்டனர்.

திருக்குறளின் கருத்துக்களை விளக்குதற்கு திருக்குறளை ஈற்றடிகளாக வைத்துச் சோமேசர் முதுமொழி வெண்பா போன்ற பல நூல்கள் யாக்கப்பட்டன. திருவள்ளுவரின் பெயரையும் திருக்குறளின் பெயரையும் பூண்ட பலகழகங்கள் பல நாடுகளில் பணிபுரிகின்றன. பல ஏடுகளும் திருவள்ளுவரின் பெயரை திருக்குறளின் பெயரையும் தாங்கிவெளிவந்தன. திருவள்ளுவர் தொடர் ஆண்டினையும் இன்று தமிழ்கூறு நல்லுலகம் வழங்கத் தொடங்கியுளது.

திருக்குறளின் சிறப்பியல்புகள் குறித்து எழுதப்பட்ட நூல்கள் பலவாகும். தமிழில் வேறு எந்த நூல்குறித்தும் இவ்வளவு தொகையான ஆராய்ச்சி நூல்கள் தோன்றவில்லை. பிறமொழிகளிலுள்ள நூல்களிலும் இவ்வளவு தொகையான ஆராய்ச்சி நூல்கள் தோன்றுதற்கு மக்களிடையே ஆர்வத்தை வளர்த்துவரும் இலக்கிய நூல் ஒன்றேனும் இல்லை எனலாம்.

தமிழ்நாட்டிலுள்ள சென்னைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மதுரைப் பல்கலைக்கழகம் எனும் மூன்று பல்கலைக்கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சிக்குத் தனித்துறைகளை தமிழினத்தின் தனிப்பெரும் தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான பேரறிஞர் அண்ணாதுரை நிறுவியிருக்கிறார். பல்கலைக்கழகங்களில் இத்தகையதொரு பெருமையை உலகத்தில் வேறெந்த நூலும் பெறவில்லை. இந்தப்பெருமையை ஆக்குவதற்கு அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றமே காரணம் எனலாம். (அ)

தமிழ்மறைக் கழகத்தின் 18-வது திருக்குறள் மாநாடு, இன்று மாலை புங்குடுதீவு மகாவித்தியாலய திருவள்ளுவர் அரங்கில் ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறுகின்றது.

ஸயர் சமர்:

# அரசுப்படைக்கு யு. எஸ்.

## 1 கோடி 75 லட்ச டாலர் உதவி

கின்ஷஸா, மே19 தெற்கு ஸயரிலுள்ள குடியேற்ற வாசிகள் அகலுவதற்கு பாதுகாப்பளிக்குமாறு ஐ. நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இங்கு நடைபெறும் யுத்தத்திற்கு தான் உதவியளிப்பதாக வெளிவந்த செய்தியை பிரெஞ்சு அரசாங்கம் மறுத்துள்ளது.

ஸயர் அரசுப்படைகளுக்கு 1 கோடி 75 லட்சம் டாலர் பெறுமதியான இராணுவ உதவியை தான் அளிக்கும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஸயரின் தேசிய விடுதலை முன்னணி பிரிவினைவாதிகளுடன் போரிட்டுவரும் அரசப்படைகள் ஷபா மாகாணத்திலுள்ள கொல்வெஸி விமான நிலையத்தை கொரிலாக்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றியுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸயரில் சண்டை தொடர்ந்து நடைபெறுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஸயரின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்கா தலையிடுகிறது என்று ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது என்பது தெரிந்ததே.

## 20 கோடி செலவில் மண்டபம்

ஹவானா, மே 19 அடுத்த ஆண்டு செப்டம்பரில் கியூபாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டுக்காக கியூபாவில் 20 கோடி ரூபா செலவில் மகாநாட்டு மண்டபம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

அடுத்த ஆண்டு ஜூன் மாத வாக்கில் இம் மண்டபம் கட்டிமுடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# பூட்டோ அப்பீல் இன்று விசாரணை

லாகூர், மே 19 பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ தம்மீது விதிக்கப்பட்ட மரண தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்திருந்த அப்பீல் மனு மீதான விசாரணை இன்று லாகூர் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

அப்பீல் விசாரணையின் போது பூட்டோ ஆஜராகத் தேவையில்லை என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தற்போது பூட்டோ ராவல்பிண்டி சிறையில் வைக்கப்பட்டுள்ளார். (உ)

''பிரஜைகளையும்

# நாட்டு அமைதியையும் காப்பது அரசின் கடமை''

— நீதி மந்திரி

[கொழும்பு] "நாட்டின் பாதுகாப்பையும் அமைதியையும் நிலைநாட்டும் வகையிலேயே தமிழ்ஈழப் புலிகள் இயக்கத்துக்கும் வேறு இயக்கங்களுக்கும் தடைவிதிக்கும் மசோதா கொண்டுவரப்படுகிறது. அரசியலில் ஒதுக்கப்பட்டு விரக்தியுள்ளானவர்களும், தீயசக்திகளும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முற்படுகின்றன."

இவ்வாறு பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாஸ தேசிய அரசுப்பேரவையில் "விடுதலைப் புலிகள் தடை சட்ட மசோதா மீது பேசுகையில் கூறினார்.

நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம் பேசுகையில், 'நாட்டில் உள்ள பிரஜைகளைப்பாதுகாத்து நாட்டில் சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்டுவது அரசாங்கத்தின் கடமையாகும்' என்றார். [உ]

## "எங்களில் ஒருவன்"

(யாழ்ப்பாணம்)

எங்களில் ஒருவன் திரைப்படத்தின் இயக்குநரான திரு. எஸ் வி. சந்திரன் நாளை யாழ்ப்பாணம் வருகிறார்.

இத்திரைப்படத்திற்கான நடிகர் நடிகையர் தெரிவு யாழ்ப்பாணத்தில் இம் மாதம் 21-ம் திகதி நடைபெறுவதனை பொட்டியே அவர் இங்கு வருகிறார் எனத்தெரிவிக்கப்பட்டது. (உ)

## நெல்லியடியில் திருமலை கோஷ்டி மோதும்

[நெல்லியடி] மாபெரும் உதைப்பந்தாட்டப் போட்டியொன்று இன்றும், நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் திருகோணமலை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை தெரிவுக்குழுவும் யாழ். சென் அரன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

மேற்படி உதைப்பந்தாட்ட போட்டிக்கான ஏற்பாடுகளை பருத்தித்துறை உதைப்பந்தாட்டச்சங்கம் செய்துவருகின்றது. (உ)

# ஈழத்து மகாமகோ பாத்தியாயர்

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, திருவாசகம் ஆகிய இலக்கிய, சமய நூல்களுக்கு ஆராய்ச்சியுரை இயற்றிய அமரர் பண்டிதமணி சு. அருளம்பலவனாரின் நினைவு நாள் இன்றாகும். அன்னாரின் தமிழ்த்தொண்டின் சேவையை நினைவூட்டு முகமாக, பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள பாராட்டுரை வருமாறு:

மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் பதிப்புக்கள், மறைமலையடிகள் என வழங்கும் சுவாமிவேதாசலம் அவர்களின் ஆராய்ச்சி உரைகள், திரு. அனந்தராமையரின் கலித்தொகைப் பதிப்பில் வரும் ஒப்புமைப்பகுதிகள் என்றிவைகளில் அமைந்த தனிப்பெருஞ் சிறப்புகளனைத்தும் ஒருங்கு தரிசிப்பதற்கு உபகரிக்கும் நல்ல சுத்தப்பளிங்குக் கண்ணாடி போன்றவை, பதிற்றுப்பத்து முதலியவைகளுக்கு அன்பர் பண்டிதமணி சு. அருளம்பலவனார் உதவிய ஆராய்ச்சி உரைகள்.

பதிற்றுப்பத்து உரையைப் படித்தது போலத் திருவாசக ஆராய்ச்சியுரையைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு அமையவில்லை. அன்பர் அவர்களுக்கும் தமது திருவாசக ஆராய்ச்சி உரையைப் புத்தக வடிவிற் பார்க்கும் நிலை கைகூடவில்லை. "ஈசனேயென் னெம்மானே

எந்தை பெருமானென்பிறவி நாசனே நான் யாதுமொன்

றல்லாப் பொல்லாநாயான நீசனேனை யாண்டாய்க்கு

நினைக்கமாட்டேன்

கண்டாயே

தேசனேயம் பலவனே செய்வ

தொன்றும் அறியேன்"

என்ற திருச்சதகப் பாடலும் உரையும் அச்சாகிய போது அச்சுப்பிரதியை மருத்துவசாலைப் படுக்கையிலிருந்து கொண்டே பார்வையிட்டுத் திருத்தஞ்செய்து கொடுத்தார்கள். கொடுத்த அக்கணமே இறுதி மூச்செழுந்தது; அறிவு மயங்காமலே நல்ல சிந்தனையோடு ஆவி பிரிந்தது.

ஈசனே என்ற பாடலைத் தொட்டுக்காட்டி, நடந்த சம்பவத்தை அன்பர் அவர்களின் குமாரன் திரு. அ. ஆனந்தநாதன் சொன்னபோது வெகு உருக்கமாயிருந்தது. குறித்த பாடலுக்குச் செய்த ஆராய்ச்சி உரையின் இறுதிப்பகுதி 'நீசனேனை' என்பது அன்பர் அவர்களுக்கும் பிரார்த்த அநுபவத்தாக்கங்கள் நீங்கி ஆன்மா சுத்தியெய்தி, கூத்துடையான் கீழ்ச் சாந்தியுறுவதாக என்று வாழ்த்துவோமாக மரண நேரத்தில் 'ஈசனே' என்ற திருவாசகப்பாடலை அதன் உரையோடு கூர்ந்து சிந்திக்க எத்துணைத்தவம் வேண்டும்.

"அவரை நீத்த தமிழர்க்கு கிடைத்த அவருரைப்பகுதியும் நீத்தலோடு அச்சிட்டு முடிந்தது மற்றைய உரைப்பகுதியும் நீத்தலின்றி அச்சிடச்செய்த பேறுவது தமிழர்க்குத் தலையாய கடனாகும்" என்பது காஞ்சி கெய்லாச சந்நிதானத்தின் அருளுரை. இவ்வுரைமுதற்பாகத்தின் முகப்பில் உள்ளது. இப்பொழுது மீதியாய ஆராய்ச்சியுரை முழுவதும் இரண்டாம் பாகமாய் 'நீத்தலின்றி' வெளிவந்திருக்கின்றது. மகா சந்நிதானத்தின் ஆசி, திரு. அ. ஆனந்தநாதனுக்கு உரியதாகும்.

திரு. உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கும் போல நீண்ட ஆயுளையும் அரோகதிடகாத்திரத்தையும் இறைவன் திரு. அருளம்பலவனாருக்கும் அருளியிருந்தால், சங்க நூல்களத்தனையும் பன்னிருதிருமுறைகளும் மற்றும் உயர்தர நூல்களும் அருளம்பலவனாரின் ஆராய்ச்சி உரையோடு வெளிவந்திருக்கும். இறைவன் திருவுள்ளத்தை யாரறிவார்! எனினும் சங்கநூற் செல்வரும் பண்டிதமணியும் ஆகிய திரு. அருளம்பலவனார் ஈழத்து மஹாமஹோபாத்தியாயரேயாவர், (அ)

## வெஸ்லி
(சாவகச்சேரி)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
பெண் தெய்வம்


## இன்றைய...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்தமாத நிகழ்ச்சியாக ஜூன் 24-ம் திகதி சனிக்கிழமை திருமதி பூமணி இராஜரத்தினத்தின் இன்னிசைக்கச்சேரிஇடம் பெறும்.
[வ]


## நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
நடித்த
மூன்று முடிச்சு

Rio (Jaffna) Now Showing
Labyrinth of Love
(Adults Only)

சில தினங்கள் மட்டும்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-30 p.m. only
Mexican Slay Rides
Western Action Picture
[Cinemascope color]

சாந்தி (யாழ். நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9 45
சிவகுமார், முத்துராமன், ஜெயசித்ரா, சோ.
எங்கம்மா சபதம்
மே 20ம், 22ம் திகதிகளில்
காலை 8-30 மணிக்காட்சி மட்டும்
CIRCUS
—color—

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெயலலிதா
[இருவேடம்]
நடித்த
வந்தாளே மகராசி
[புதிய பிரதி]

ஸ்ரீதர் [யாழ்ப்பாணம்]
வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 3வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவள் வசந்தம்
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news.
Soccer—Germany vs. Italy — World Cup Tournament — Motor Cycle Display. (All in Colour)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜோதி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7693
(யாழ். நகர்)
ஜெமினி-சாவித்திரி
கடன்வாங்கிக் கல்யாணம்

ராணி (யாழ்.நகர்)
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
சிவாஜி—மஞ்சுளா
நடித்த
உ த் த ம ன்


# இலங்கை லயன்ஸ் கழக 12-வது மாநாடு

# யாழ். லயன்ஸ் கழகம் முதலிடத்தைப் பெற்றது

## பல்வேறு திட்டங்களுக்கும் பாராட்டு

(கொழும்பு)

"பதின்மூன்று லட்சம் இளைஞர்களும், யுவதிகளும் இந்த நாட்டில் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். தங்களின் எதிர்கால நலனுக்கு இவர்கள் அத்தனைபேரும் அரசாங்கத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்தஇளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்குவதில் நீங்கள் துணைபுரிய வேண்டும். இவர்கள் எமது குழந்தைகள். இவர்களைப் பராமரிக்க வேண்டியதுஎமதுகடமை".

இவ்வாறு, பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைலயன்ஸ் கழகத்தினரின் 12வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் குறிப்பிட்டார்.

"எந்தவொரு அபிவிருத்திமுயற்சியும் சிறந்த முகாமைத்திறனின் கீழ்தான் மேற்கொள்ளப்படவேண்டும்" என்று குறிப்பிட்ட சபாநாயகர்;

"நாம் அனைவரும் சேர்ந்து இந்த நாட்டை வளமுள்ள நாடாக மாற்றுவோம். வாழ்க்கைத்தரத்தைச் சற்று உயர்வானதாக்குவோம். இதில் இலங்கையிலுள்ள லயன்ஸ் கழகத்தினருக்கும் பெரும் பங்குண்டு" என்று கேட்டுக் கொண்டார்.

### இரண்டுநாள் மாநாடு

அகில இலங்கை ரீதியில், கடந்த 13ம், 14ம் திகதிகளில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேசமகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றலயன்ஸ் கழக மகாநாட்டில், சுமார் இரண்டாயிரம் கழக அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். இந்தியாவிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

முதல்நாள் உத்தியோகத்தர்களுக்கான வகுப்புகள் நடத்தப்பட்டன.

திட்டம் சம்பந்தமாக திருவாளர்கள் கே. சச்சிதானந்தாவும், தயா அபே விக்கிரமாவும், பொதுஜனத்தொடர்பு சம்பந்தமாக திரு. மன்சூர் கௌஸம், அங்கத்தவர்களைச் சேர்த்தல் சம்பந்தமாக லயன்ஸ் டன்ஸ்டன் டி அல்விஸ், எம். ஜே. ஏ. ஜெயநாதன் ஆகியோரும் விரிவாக விளக்கமளித்தனர்.

கருத்தரங்குகள் மிகவும்சிறப்பாக நடத்தப்பட்டன.

### சிறந்த பரிசு யாழ்ப்பாணத்துக்கு

திறமையாகச் செயல்பட்ட லயன்ஸ் கழகமாக, யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் முதலிடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து இரண்டாவது இடத்தை நுகேகொட லயன்ஸ்கழகமும், மூன்றாவது இடத்தைக் கண்டி லயன்ஸ் கழகமும் தட்டிக் கொண்டன.

### தலைவருக்கான பரிசு

திறமையான முறையில் செயல்பட்ட, சிறந்த லயன்ஸ் கழகத்தலைவருக்கான சிறப்புப் பரிசு, யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் எஸ். சுப்பிரமணியத்துக்கும், சிறந்த லயன்ஸ் கழக காரியதரிசிக்கான சிறப்புப் பரிசு யாழ். லயன்ஸ்கழகக் காரியதரிசி திரு. இம்மானுவேல் ஆர். ஜோசெப்புக்கும் கிடைத்தன.

### லயன்ஸ் மகளிர்

சிறந்த லயன்ஸ் மகளிர் கழகத்துக்கான சிறப்புப்பரிசு, யாழ். லயன்ஸ் மகளிர் கழகத்துக்குக் கிடைத்தது.

சிறப்பான முறையில் கூட்டங்களை ஒழுங்குபடுத்துபவருக்கான பரிசு, யாழ் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். ரி. நவரத்தினத்துக்குவழங்கப் பட்டது.

### யாழ். லயன்ஸுக்கு கிடைத்த பரிசுகள்

இந்த மகாநாட்டில், யாழ். லயன்ஸ் கழகத்தினருக்கு மொத்தம் இரண்டு கேடயங்களும், மூன்று வெள்ளிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டன. யாழ். லயன்ஸ் கழகத்தினர்தான் அதிகமான பரிசுகளைத் தட்டிக்கொண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### யாழ். லயன்ஸுக்கு ஏன் கிடைத்தன?

இவ்வருடம் யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் ஏன் கூடுதலான பரிசுகளைப் பெற்றுக் கொண்டது என்பதற்கு பல காரணங்கள் உண்டெனலாம்.

சுகாதாரம் வைத்தியத் துறையில்; திருநெல்வேலி அநாதை இல்லம், கொழும்புத்துறை வயோதிபர் இல்லம், கைதடி செவிடர் குருடர் இல்லம் ஆகியவற்றிலுள்ளவர்களுக்கு இலவச வைத்திய சிகிச்சையளித்தும், முல்லைத்தீவு, பருத்தித்துறை, மன்னார், வவுனியா ஆகிய இடங்களுக்குச் சென்று பல்வேறு நோயாளிகளுக்கும் இலவச சிகிச்சை அளித்ததிலும் யாழ். லயன்ஸ் கழகம் சிறப்பான சேவை புரிந்திருக்கிறது.

கல்வித் துறையில், மாணவர் மாணவிகளிடையேயும், பொதுவாகவும் பொது அறிவுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், ஓவியப் போட்டி, நாடகப்போட்டி என்று பல துறைகளிலும் போட்டிகள் நடத்தி மாணவரிடையே ஒரு உற்சாகத்தை யாழ். லயன்ஸ் கழகம் ஏற்படுத்தியிருந்தது.

இவை தவிர, இளைஞர்கள் மத்தியில் பல்வேறு துறைகளில் கருத்தரங்குகள், அபிவிருத்தித் திட்டங்கள், விவசாயிகளுக்கு பலதுறைகளில் கருத்தரங்குகள் ஆகியன நடத்தியும், சீ-நோர் தாபனத்துடன் தொடர்புகொண்டு, அதன் மூலம் இலங்கை வங்கியுடன் ஆலோசனை பெற்று கடனுதவி மூலம் மூன்று லட்சம் ரூபா செலவில் 9 இளைஞர்களுக்கு மூன்று இயந்திர வள்ளங்களைப் பெற்றுக் கொடுத்ததிலும் யாழ். லயன்ஸ் கழகம் உதவியளித்தது. வள்ளங்களுக்குப் பெற்றுக் கொண்ட கடனை சுலபமான முறையில் திருப்பிச் செலுத்தும் வசதியையும் கழகம் செய்து கொடுத்தது.

சர்வதேசஉறவு முறையில் யாழ். லயன்ஸ் கழகம் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் பாராட்டைப் பெற்றுக் கொண்டன. நார்வே, அமெரிக்கா, மலேசியா ஆகிய நாடுகளுடன் யாழ். லயன்ஸ் கழகம் தொடர்பு கொண்டு இந்நாடுகளின் உதவியுடன் மூக்குக்கண்ணாடி, காது கேட்கும் கருவிகள், பொய்க்கால் போன்றவை பெற்றுக் கொண்டு இவற்றை இங்கு இலவசமாக வழங்கியது.

தேசிய நல்லிணக்கட்டிக் காப்பதில் யாழ் லயன்ஸ் கழகம் எடுத்த முயற்சிகளும் மகாநாட்டில் பாராட்டைப் பெற்றுக்கொண்டன. அகில இலங்கை ரீதியில் நீர்கொழும்பு, காலி, மற்றும் தென்னிலங்கைப்பகுதிகளில் அந்தந்த லயன்ஸ் கழகத்தினருடன் இணைந்து தேசிய நல்லிணக்கட்டி எழுப்பக்கூடிய முறையில் கட்டுரை பேச்சு

[6-ம் பக்கம் பார்க்க]

## சுவீப் முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் 66-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
24 H 0270
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
01 V 6094
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
51 E 0628
ரூபா 10,000

தலா 1,247 ரூபா 16 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசு பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 03 A 0916 | 20 A 0254 |
| 53 A 0695 | 20 A 0072 |
| 34 A 0414 | 39 A 0900 |
| 24 B 0068 | 38 B 0659 |
| 44 B 0661 | 44 B 0839 |
| 18 B 0185 | 21 B 0939 |
| 47 B 0791 | 01 C 0827 |
| 47 C 0539 | 62 C 0440 |
| 51 M 0836 | 22 N 0291 |
| 49 N 0243 | 52 O 0413 |
| 37 O 0979 | 19 O 0746 |
| 52 O 0853 | 64 O 0243 |
| 55 P 0652 | 53 Q 0985 |
| 55 Q 0393 | 54 R 0046 |
| 43 R 0945 | 04 R 0070 |
| 56 S 0445 | 01 S 0167 |
| 54 G 0542 | 19 D 0651 |
| 44 D 0293 | 36 E 0695 |
| 40 E 0675 | 45 E 0737 |
| 01 E 0736 | 60 F 0278 |
| 17 F 0236 | 34 F 0972 |
| 04 F 0478 | 24 F 0382 |
| 06 F 0209 | 60 G 0094 |
| 46 G 0774 | 41 G 0337 |
| 26 H 0947 | 31 H 0552 |
| 53 T 0625 | 50 T 0834 |
| 33 T 0121 | 59 T 0848 |
| 39 T 0298 | 34 T 0023 |
| 47 T 0076 | 15 U 0074 |
| 35 U 0629 | 46 U 0101 |
| 37 U 0277 | 35 V 0433 |
| 08 V 0963 | 11 V 0893 |
| 58 V 0392 | 24 V 0577 |
| 19 V 0423 | 55 W 0776 |
| 17 H 0853 | 12 H 0358 |
| 22 H 0009 | 35 H 0098 |
| 14 J 0976 | 43 J 0936 |
| 11 J 0292 | 26 K 0816 |
| 15 K 0498 | 16 K 0349 |
| 24 K 0761 | 59 L 0687 |
| 33 L 0906 | 31 L 0570 |
| 31 M 0052 | 02 M 0090 |
| 48 W 0202 | 58 X 0127 |
| 36 X 0606 | 28 X 0839 |
| 37 X 0052 | 15 X 0563 |
| 23 Y 0984 | 53 Y 0146 |
| 40 Y 0685 | 38 Y 0207 |
| 05 Z 0734 | 35 Z 0064 |
| 53 Z 0567 | 38 Z 0546 |
| 05 Z 0674 | 54 Z 0327 |

இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

## பழைய மார்க்கட் கடை

# உரிமையாளர் கடைகளை பொறுப்பேற்கவில்லை

[யாழ்ப்பாணம்]

யாழ். பழைய மார்க்கட் கடைகளின் உரிமையாளர்கள் தங்கள் கடைகளை இன்னும் பொறுப்பேற்கவில்லை.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சே. சிவஞானத்தை பழைய மார்க்கட் கடை உரிமையாளர்கள் சந்தித்தார்கள். இச்சந்திப்பின்போது 7 வருடத்திற்குப் பின்னரும் தொடர்ந்து ரெண்டர் எதுவுமின்றித் தங்களுக்கே வழங்கப்படும் என ஒப்பந்தத்தில் ஒரு சரத்து இடம்பெறவேண்டும் என்று கடைக்காரர்கள் கோரினார்கள்.

மேலிடத்தின் முடிவின்படியேதான் எதையும் செய்யமுடியுமென்றும் அப்படிபொரு உத்தரவு எதுவும் தமக்கு வரவில்லையென்றும் ஆணையாளர் அவர்களிடம் தெரிவித்தார்.

ஒப்பந்தத்தில் கைவெழுத்திட்ட பின்னரே உரிமையாளருக்கு கடைகள் வழங்கப்படுமென்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

உரிமையாளர்கள் கடைகளை பாரம் எடுக்காமல் சென்றனர்.

# யாழ். பொதுசன நூலக ஆலோசனைக் கமிட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் தலைமையில் யாழ் பொதுஜன நூலக ஆலோசனைக் கமிட்டி ஒன்று நிறுவப்படவுள்ளது.

1972ம் ஆண்டுவரை பொது ஜன நூலக கமிட்டி இருந்து வந்தது. அதன்பின் இக்கமிட்டிக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சே. சிவஞானம் நேற்று முன்தினம் இக்கமிட்டிக்கான உறுப்பினர்களை நியமித்தார்.

கமிட்டி உறுப்பினர் விபரம் வருமாறு.

நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் தலைவர். செல்வி ஆறுமுகம் (அதிபர் வேம்படி மகளிர் கல்லூரி), திரு. ஆ. எஸ். தம்பையா யாழ் வளாக நூலகர்) வண. பிதா பிரான்சிஸ் (சென்பற்றிக் கல்லூரி அதிபர்), திரு. ஈ. எஸ். சண்முகநாதன் (யாழ் மத்திய கல்லூரி அதிபர்), திரு. ஏ. எஸ். நல்லையா (கல்வி அதிகாரி) இக் கமிட்டிச் செயலாளராக யாழ் நூலகர் திருமதி நடராசா கடமையாற்றுவார். [ச]

## யாழ். லயன்ஸ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கவரொட்டிப் போட்டிகளை நடத்தியது அண்மையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது பல்வேறு பகுதிகளிலிருந்தும் யாழ். நோக்கி வந்த அகதிகளுக்கு யாழ் லயன்ஸ் கழகம் போதிய சேவை அளித்ததும் பாராட்டைப் பெற்றது.

பாராட்டைப்பெற்ற மற்றொரு அம்சம், யாழ் லயன்ஸ் கழகத்தினர் தற்போது ஆரம்பித்துள்ள வேம்பிராய் கிராம முன்னேற்றத்திட்டம் ஆகும்.

### இரு பிரிவுகளாக அமைகிறது

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 வது மாவட்டமாக விளங்கும் இலங்கை லயன்ஸ் கழகம் இப்பொழுது 306 (ஏ) பிரிவு என்றும் 306 (பி) பிரிவு என்றும் இருபிரிவுகளாக அமைக்கப்பட்டன. லயன்ஸ் கழகத்தினர் பல்வேறு அமுலாக்கும் திட்டங்களையும் சுலபமாகவும் விரைவாகவும் செயல்படுத்தும் வகையில் இருபிரிவுகளாக்கப்பட்ட அமைப்புகளுக்கு 306 (ஏ) பிரிவுக்கு திரு. மகேந்திர அமரசூரிய கவர்னராகவும் 306 (பி) பிரிவுக்கு திரு. வி. மனோகரன் கவர்னராகவும் ஏகமனதாக மகாநாட்டுப் பிரதிநிதிகளின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் தெரிவு செய்யப்பட்டனர்.

லயன்ஸ்கழக மகாநாட்டு முடிவில் காலஞ்சென்ற லயன்ஸ் கழக அங்கத்தவர்களின் ஆத்மசாந்திக்கு அஞ்சலிசெலுத்தப்பட்டது.

# திருக்கேதீஸ்வர ரதோற்சவம் இன்று

[மன்னார்]

திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த ரதோற்சவம் இன்று நடைபெறுகிறது. நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

### சித்தங்கேணியில்

சித்தங்கேணி மகா கணபதிப் பிள்ளையார் கோவில் ரதோற்சவம் நாளைக் காலை நடைபெறுகிறது. [அ]

### அளவெட்டியில்

அளவையூர் ஞானபழாவளைப் பிள்ளையார் கோவில் திரிஜா [முப்பெரும்] ரதபவனி விழா நாளை நடைபெறுகிறது.

[வண்ணார்பண்ணை]

வேலணை மேற்கு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கிறது. அடுத்த நாள் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

## இந்திய வானொலியில் இன்று பாடுகிறார்

நயினாதீவைச்சேர்ந்த செல்வன் மு. நவரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரி இன்று காலை 8-30 மணிக்கு பாண்டிச்சேரி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப்படும். அகில இந்திய வானொலிப் பாடகரான இவர் இசைப்பேராசிரியர் பத்மஸ்ரீ மதுரை என். சோமசுந்தரத்தின் விசேட பயிற்சி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [கா-இ]

## பெருஞ்சித்திரனார் யாழ். வந்தார்

[யாழ்ப்பாணம்]

தமிழ் மறைக் கழகத்தின் 18-வது திருக்குறள் மாநாட்டிற்கு தென்மொழி ஆசிரியர் புலவர் பெருஞ்சித்திரனார் நேற்றுக் காலை 10 மணிக்கு விமான மூலம் இங்கு வந்துள்ளார். (செ-இ)

## கோண்டாவிலில்

# இன்று நடைபெறும் 2-வது ஆண்டு விழா

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் முன்னேற்ற கழகத்தின் 2வது ஆண்டு விழா, இன்றுமாலை 6 மணிக்கு மக்கள் முன்னேற்றக் கழக மண்டபத்தில் நடைபெறுகிறது. பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணம் எம் பி திரு. வெ. யோகேஸ்வரன் கலந்துகொள்கின்றார்.

தலைமையுரை திரு. மு. சபாபதி நிகழ்த்துவார், சிறப்புரைகளை திருவாளர்கள் வி. பொன்னம்பலம், கோவை மகேசன், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி க. செல்வகுமார், பெ. கனகசபாபதி, க. கனகலிங்கம், பொன் காங்கேயன் ஆகியோர் வழங்குவர்.

"லட்சியம் நிரந்தர வெற்றி பெற அகிம்சையே சிறந்த பாதை" என்ற தலைப்பில் பட்டிமன்றம், திரு சபா ஆனந்தன் தலைமையில் நடைபெறும். சார்பாக சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம், பண்டிதர் கா. இராசையா, வண்ணை ஆனந்தனும் எதிராக கே. செந்தில்வேல், வ. ஐ ச. ஜெயபாலன், ஆ. குமரன் ஆகியோர் வாதிடுவர்.

அதிர்ஷ்டசீட்டிழுப்பை திரு வெ. யோகேஸ்வரன், சின்னத்துரை அன் பிரதர்ஸ் முதல்வர் திரு. சி. சின்னத்துரை, மிக்கவைத் அதிபர் திரு க. கனகராஜா, அண்ணா கோப்பி முதல்வர் திரு. பொ. நடராஜா ஆகியோர் தெரிவு செய்வர். விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [கே]

## இன்று விரிவுரை

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் புதுக்கோவில் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மகோற்சவத்தை யொட்டி வண்ணை பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா இன்று இரவு 7 மணிக்கு 'சூரன்போர்' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துவார். (க)

# 21-5-78 வாரமலரில்

● தமிழ் ஆர்வம் மிக்க மொரிஷியஸ் இளைஞர் சண்முகம் முனிசாமி அளித்துள்ள பேட்டி.

● இலங்கை இரசிகர்களுக்கு பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்தரராஜன் விடுத்துள்ள பேட்டி

மற்றும் வழமையான அம்சங்கள்.

## தமிழ் ஈழ—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் கண்டிக்கும் அதேவேளையில் இல்லாத ஓர் இயக்கத்தை தடைசெய்யக் கொண்டுவரும் இச் சட்டத்தை எதிர்க்கிறோம்.

சர்வாதிகாரி ஹிட்லரைப் பயங்கர சர்வாதிகாரியாக்கிய 'வைமர' சட்டத்தைப் போன்று ஜனாதிபதியை இச்சட்டம் சர்வாதிகாரியாக்கிவிடும். ஆனால் ஜே. ஆர். ஜெயவர்த்தன மீது எமக்கு நம்பிக்கை உண்டு. அவரை விடுத்து இச்சட்டம் வேறொருவரின் கையில் கிடைத்தால் என்ன ஆகும் என்று நினைத்துப் பார்க்கவே முடியாது.

இதுவரை தமிழ்மக்கள் மொழிக்காக போராடிவந்தார்கள். கடந்தஇனக்கலவரத்தின் பின்னர் அவர்கள் தமது உயிருக்காகப் போராட வேண்டிய நிலையில் உள்ளனர்.

சமாதானப் பேச்சு வார்த்தைகள் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும் என்று திரு. ஜே. ஆர். கூறியதில் எமக்கு நம்பிக்கை உண்டு. தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை உணர்ந்து பிரதமரும் ஜனாதிபதியும் இதை அணுக வேண்டும். [மஇ]

## பேரவையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசப்படுகிறது என்வே இது குறித்து நான் ஒரு அறிக்கை விடவிரும்புகிறேன் என்று கேட்டுக் கொண்டதை அடுத்து அவருக்கு அறிக்கைவிட அனுமதிவழங்கப்பட்டது.

### அமிர் விளக்கம்

திரு. அமிர்தலிங்கம் தமது அறிக்கையில், கடந்த ஆண்டு ஜூன் மாதம் 3ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் எனது மனைவி சிங்களவர்களின் இரத்தத்தில் நீச்சலடிப்போம் என்று கூறியதாக இன்னும் சன்சோனிக்கமிஷன் முன்பும் கூறப்பட்டது. ஜூன் 3ம் திகதிய கூட்டத்தில் 2 பிக்குகளும் ஒரு சிங்கள கிராமசபைத் தலைவரும் கலந்து கொண்டனர் இந்நிலையில் எனது மனைவி அக்கூட்டத்தில் அவ்வாறு கூறியிருக்கமுடியாது என்று விளக்கினார். (ம-இ)

## பழையமாணவர் சங்கம்

[யாழ்ப்பாணம்]

இளவாலை சென்ஹென்றிஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க புதுவருட நிர்வாகிகள் விபரம் வருமாறு!

தலைவர் டாக்டர் எஸ். பி. அத்தனுஸியார் உபதலைவர்கள் பி. நடராஜா எஸ்.பஸ்தியாம்பிள்ளை டாக்டர் பாக்கியசோதி ஜோசப் செயலாளர் திரு. எம்.பி. இராசநாயகம் உபசெயலாளர் திரு. எஸ். ஜெகநாதன் பொருளாளர் திரு. கே. கதிரேசநாதன் ஆகியோருடன் 13 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. [இ]

## யாழ். கோஷ்டி வெற்றி

[நெல்லியடி]

நெல்லியடி எஸ். சி சி. விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணம் "சலிகுஸ்" விளையாட்டுக்கழகம்வதிரி "போய்பஸ்" விளையாட்டுக்கழகத்தை 5 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது.

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்வுதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்கு திரு. எஸ். ஜோதிரவி மத்தியஸ்தம் வகித்தார் [உ]

## அச்சுவேலி—

(1-பக்கத் தொடர்ச்சி)

2ம், 8ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி கனகமனோகரனும் ஆஜரானார்கள்.

இவ் வழக்கில் சம்பவம் நடந்த தினமான 77 செப்டம்பர் 12ம் திகதி சங்கக் கணக்கை பரிசோதிப்பதற்காக, கோட்டிலுள்ள 3 சான்றுப் பொருட்களான கணக்குப் புத்தகங்களை பரிசோதகர் பார்வையிட அனுமதி வழங்குமாறு அரச சட்டத்தரணி திரு ஜயக்குமார் விண்ணப்பம் செய்திருந்தார்.

இதற்கு ஆட்சேபனை இருக்கிறதா? என நீதிபதி கேட்டபோது ஆட்சேபனையில்லை என எதிரிகளின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இவ்வழக்கில் 77 செப்டம்பர் 9ம் தேதி அச்சுவேலி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தில் கொள்ளையடித்ததாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அருமைச்சந்திரன், ரஞ்சன் உதயணன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவ் வழக்கு விசாரணை இம்மாதம் 29ம் திகதி ஆரம்பமாகும். [க]

# சார்லி சப்ளின் உடல் கிடைத்தது

லண்டன், மே 19

காணாமற்போன பிரபல நகைச்சுவை நடிகர் சார்லி சப்ளினின் உடல் சோளக் கொல்லை ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

11 வாரங்களுக்கு முன்னர் அது திருடப்பட்டமயானத்தில் இருந்து இருபது மைல்களுக்கு அப்பால் சோளக் கொல்லை ஒன்றில் இருந்து பிணத்தை பொலிசார் தோண்டி எடுத்தார்கள். இது சம்பந்தமாக ஸ்விச்சர்லாந்தில் அகதிகளாக வாழ்ந்து வரும் இருவரைப் பொலிசார் கைதுசெய்தனர்.

இவர்களில் ஒருவர் பல்கேரியர், மற்றவர் போலந்துக்காரர் என்று விசாரணை நடத்திய பொலிசார் தெரிவித்தனர். (உ)

## மரண அறிவித்தல்

### திருமதி லலிதாம்பாள் ஈஸ்வரசர்மா

திருமதி லலிதாம்பாள் ஈஸ்வரசர்மா இறைவனடி சேர்ந்துவிட்டார். இவர் ஈஸ்வரசர்மாவின் அன்புமனைவியும் யாழ் மத்தியகல்லூரி மாணவன் செல்வன் முருகசிவத்தின் ஆருயிர் அன்னையும் இளைப்பாறிய அதிபர் பிரம்மஸ்ரீ சபாரத்தினஐயர் அனந்தலஷ்மி அம்மா அவர்களின் அன்பு மருமகளும் கோண்டாவில் காலஞ்சென்ற பிரம்மஸ்ரீ குமாரசாமிஐயர் லட்சுமிஅம்மாள் ஆகியோரின் அன்பு மகளும், இரத்மலானை அஸ்பெஸ்டோஸ் சீமெந்து தொழிற்சாலை, கணேசசர்மா, ஈஸ்வரி, ஜயலஷ்மி ஆகியோரின் மைத்துனியும், விசாலாட்சி, சகுந்தலாதேவி, சசிகலாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகை 20-5-78 சனிக்கிழமை முற்பகல் நடைபெறும். 44/9, மணத்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் 9343

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.